திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த மத்திய பாதுகாப்புப் படை பற்றிய மசோதா நிறைவேற்றப்பட்டாலும் தமிழகத்தில் மட்டும்தான் இப்பொழுது "இம்ப்ளிமென்ட்" செய்திருக்கிறார்களா ? அல்லது, அகில இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் இந்தப் படை அமைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழகத்தில் இரண்டு இடங்களில் அமல்படுத்தப்பட்டது பற்றித்தான் விவரம் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் ஒருவேளை அமல்படுத்தப்பட்டிருக்கக் கூடும். அதற்கு ஒன்றும் தடை இல்லை.

அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்டோருக்குச் சலுகைகள்

* 247 **வினா**—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பதவிகளுக்கு நியமனம் செய்ய நடத்தப்படும் தேர்வுகளில், தகுதியும், திறமையும் உடைய தாழ்த்தப்பட்ட நபர்களுக்குப் பொது ஸ்தானங்களில் வாய்ப்பளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) தமிழ்நாடு மாநில சார் பணிகள் விதிகளின் 22 (பி) பொது விதிக்கிணங்க, தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படும் பதவிகளுக்கு அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர், ஆகியோரின் விண்ணப்பங்களும் கருதிப் பார்க்கப்பட வேண்டும். அரிசனங்கள், பழங்குடி மக்கள் அல்லது பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த விண்ணப்பதாரர் ஒருவர் தகுதியின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்டால், அதன் காரணமாக அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்காக ஒதுக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை எவ்வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது.

தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள செய்திப்படம்

* 248 **வினா**—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு செய்தித் துறையினர் தயாரித்துள்ள செய்திப் படம் ஒன்றைத் திரையிட மத்திய சென்சார் போர்டு அண்மையில் தடை விதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) தடை விதிக்கவில்லை. ஆனால், ஒரு செய்தி மலரில் விளக்கவுரையில் இருந்த சொற்றொடர் ஒன்றுக்கும் மற்றொரு செய்தி மலரில் இருந்த காட்சி ஒன்றுக்கும் தணிக்கைக்குழு மறுப்புத் தெரிவித்தது.

திரு. எஸ். கணேசன் : தடை விதிக்கப்படவில்லையென்றாலும், சில காட்சிகள் தவிர்க்கப்பட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தக் காட்சியில் எப்படிப்பட்ட கொள்கையைப்பற்றி வருகிறது என்று சொல்ல இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அதுபற்றிப் பேசுவதற்காக கோட்டையில் ஒரு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் நடைபெற்றது. அது தமிழக அரசு செய்தித் துறைப்